உ

ஸ்ரீமுருகன் துணை.

உத்தமபாளையம்

டிராமா உபாத்தியாயர்

**U.P. காமாக்ஷிபிள்ளையவர்கள்**

இயற்றிய

# இந்துதேசாபிமானிகள்

# இனியரமணியகீதம்

இவை

மதுரை புக்ஸெல்லர்

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

மு. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

வெளியிட்டது.

OFFICE OF THE RE
MADR

ஸ்டர் காப்பிரைட்.

1924 அணா 5.

Meenalochani Press, Madura:—24.

உ

ஸ்ரீமுருகன்றுணை.

---

இந்துதேசாபிமானிகள்

# இனியரமணியகீதம்

இஃது

பெரியகுளம் தாலூகா உத்தமபாளையம்

பழனியாண்டி பிள்ளை அவர்கள்

குமாரர்

ட்ரர்மா உபாத்தியாயர்

**U.P.காமாக்ஷிபிள்ளை அவர்கள்**

இயற்றியது.

---

மதுரை புக்ஷாப்

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

**மு. கிருஷ்ண பிள்ளை அவர்கள்**

வெளியிட்டது.

---

ரிஜிஸ்டர்-காப்பிரைட்.

---

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.

1924

OFFICE OF THE REGISTRAR
15 DEC. 1924
MADRAS

# முகவுரை.

ஸகோதரர்களே!

நமது தமிழ் நாட்டில் எண்ணிறந்த கவிவல்லோர்களால் சுதேசகீதம் எழுதப்பட்டிருப்பது யாவருக்கும்தெரிந்த விஷயம். அதுபோல் அடியேனும் எனது சிற்றறிவுக் கெட்டினமட்டில் தற்காலநவீனநாகரீகவர்ணமெட்டுகளுக் கிணங்க தேசபக்தர்கள் மீது கீர்த்தன மியற்றி இந்நூலுக்கு இந்து தேசாபிமானிகள் இனியரமணியகீதம் என்று நாமஹரணம் சூட்டி இருக்கிறேன்.

ஷெ நூலை தத்தம் சிநேகிதர்களும் வாசித்து அதன் உண்மை யுணர்ந்து மதுபானம் ஜாதி வித்தியாச முதலிய அஞ்ஞானங்களை நீக்கி முற்காலத்தில் தெய்வத் தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனர் கையாண்டு வந்த உத்தம நெசவுத் தொழிலை அபிவிர்த்தி செய்து இன்னும் பொது நன்மைக்குரிய சாதனங்களைக் கைக்கொண்டு நமது தேசம் முன்னேற்றத்திற்கு வரும் வண்ணம் செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.

U. P. காமாக்ஷி பிள்ளை,
ட்ராமா உபாத்தியாயர்,
உத்தமபாளையம்.

| | பாட்டின் தலைப்பெயர் | தேசாபிமானிகள் பெயர் |
|---|---|---|
| 1 | மாதாஉனை | பாரதமாதாதுதி |
| 2 | பாரதமாதா | ஷை |
| 3 | வந்தேமாதரம் | வந்தேமாதரம் |
| 4 | இந்துநாடே | இந்துநாட்டுச்சிறப்பு |
| 5 | ராமகிருஷ்ண | ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் |
| 6 | சாமிவிவே | ஸ்வாமிவிவேகானந்தர் |
| 7 | தகுந்த | சாரதாபீடஜகத்குருசாமிசங்கராச்சாரி |
| 8 | சிரத்தானந்தர் | சாமிசிரத்தானந்தர் |
| 9 | தாதாபாய் | தாதாபாய்நௌரோஜி |
| 10 | பாலதிலகரை | லோகமான்யபாலகங்காதரதிலகர் |
| 11 | திலகர்போல் | ஷை |
| 12 | சீர்மலிந்திடும் | ஷை |
| 13 | காந்தியை | மஹாத்மாகாந்தி |
| 14 | வெகுகெண் | ஷை |
| 15 | கேளுங்கள் | ஷை |
| 16 | வேந்தர் | ஷை |
| 17 | மஹாத்மா | ஷை |
| 18 | காருண்ய | ஷை |
| 19 | காந்தியே | ஷை |
| 20 | பிரசித்தி | ஷை |
| 21 | மிஸ்டர் | மிஸ்டர்கோபாலகிருஷ்ணகோகலே |
| 22 | ரவீந்திரநாத் | ஸ்ரீமான்ரவீந்திரநாத்தாகூர் |
| 23 | நவீனதேசபக்தர் | ஷை |
| 24 | லஜபதிராய் | லாலாலஜபதிராய் |
| 25 | ஆனந்த | பாபு ஆனந்தமோஹன்போஸ் |
| 26 | பிரோஜிஷா | ஸர் பிரோஜிஷாமீர்வான்ஜிமேடா |
| 27 | டாக்டர் | கனம் டாக்டர் ராஷ்விஹாரிகோஷ் |
| 28 | பரோபகார | பரோடாமஹாராஜாகயகவார் |
| 29 | பாபுபெபின் | பாபு பெபின்சந்திரபால் |
| 30 | சுதேசமித்ரன் | பிர்மஸ்ரீ ஜி. சுப்பிரமணியஐயர் |
| 31 | ஞாலம்புகழும் | அலிசகோதர ஸ்ரீமான்கள் |
| 32 | முகம்மதலி | ஷை |
| 33 | மவ்லானா | ஷை |
| 34 | பண்டித | ஸ்ரீமான் பண்டிதமோதிலால்நேரு |
| 35 | சித்தரஞ்சனதாஸ் | ஸ்ரீமத் சித்தரஞ்சனதாஸ் |
| 36 | சிலமுள்ள | ஷை |

| | பாட்டின் தலைப்பெயர் | தேசாபிமானிகள் பெயர் |
|---|---|---|
| 37 | அரவிந்த | ஸ்ரீமான் அரவிந்தகோஷ் |
| 38 | மேலான | ஸ்ரீமான் யாகூப்ஹாசன் |
| 39 | நாளும் | ஜனம் டாக்டர் கிச்சிலு |
| 40 | சத்யபாலு | ஜனம் டாக்டர் சத்தியபால் [யார்க |
| 41 | மதன்மோஹன் | ஸ்ரீமான் பண்டித மதன்மோஹன்மாளவி |
| 42 | குவலயம் | ஸ்ரீமான் சக்ரவர்த்திராஜகோபாலாச்சாரி |
| 43 | புவியோர் | ஸ்ரீமான் பொம்மாஞ்சி |
| 44 | வரதராஜபூமன் | ஸ்ரீமான் டாக்டர் வரதராஜலு நாயுடு |
| 45 | சுப்ரமண்யபாரதி | பிர்மஸ்ரீ சுப்பிரமணியபாரதி |
| 46 | தேசபக்தி | ஜனம் டாக்டர் ராஜன் |
| 47 | தேவதாஸ்காந்தி | ஜனம் தேவதாஸ் காந்தி |
| 48 | மன்னன்திவான் | திவான் பஹதூர் மாதவராவ் |
| 49 | சுதந்திரதேவி | ஆனரபில் மிஸ்டர் ஜார்ஜ்ஜோஸெப் |
| 50 | மாதவநாயர் | ஜனம் மாதவநாயர் |
| 51 | தேசாபிமானிகளில் | ஜனம் சிதம்பரம்பிள்ளை |
| 52 | கஸ்தூரிபாய் | மாதுஸ்ரீ கஸ்தூரிபாய் |
| 53 | சரோஜினி | ஸ்ரீமதி சரோஜினிதேவி |
| 54 | சாஸ்திர | ஸ்ரீமதி சாரவிதேவி |
| 55 | பார்வதிதேவி | ஸ்ரீமதி பார்வதிதேவி |
| 56 | விசுவாசன் | மட்டப்பாறைபிர்மஸ்ரீவெங்கட்டராமய்யர் |
| 57 | கிருஷ்ணசாமி | அருமந்தநகரம் ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணசாமி |
| | | அய்யங்கார் [தராவுத்தர் |
| 58 | கண்யவானும் | உத்தமபாளையம்ஜனம்முகம்மதுமீராசுறுத் |
| 59 | பீர்முகம்மதண்ணல் | கம்பம்ஜனம்பீர்முகம்மதுராவுத்தர் |
| 60 | நாராயணசாமி | தேவாரம்ஜனம்நாராயணசாமிசெட்டியார் |
| 61 | தேசியநாகலிங்கம் | உடுமலைப்பேட்டை ஜனம் நாகலிங்கம் |
| 62 | அன்பார்ந்த | மதுவிலக்கு [பிள்ளை |
| 63 | வீடுதோறுமே | கைராட்டினம்வேண்டுதல் |
| 64 | ஜாதிவித்யாசமேது | ஜாதிவித்தியாசமொழித்தல் |
| 65 | கதரைநெய்குவீர் | கதர்நெய்தல் |
| 66 | தமிழைவாசிப்பீர் | கல்வி அபிவிர்த்தி |
| 67 | உத்தமசிரேஷ்டரே | ஒற்றுமைச்சீர்திருத்தம் |
| 68 | மூதறிவுடைய | மகாத்மாகாந்தியின்போதனைமுறை |
| 69 | வந்தேமாதரமும் | வந்தேமாதரவந்தனைவழிபாடு |
| 70 | கூறுகிறேன் | திரிசொல்உபாக்யானம் |
| 71 | ஆதிஇறையோன் | அல்லாஹு அக்பர்ஜெயகீதம் |
| 72 | ஜெயஜெய | தேசபக்தர்கள் மங்களவாழ்த்து |

உ

# சாற்றுக்கவிகள்.

அநுமந்தநகரம் மதுரகவி ஸ்ரீலஸ்ரீ

ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள்

இயற்றியது

## அறுசீரடிவிருத்தம்

உலகளந்த ஒருவனென வுயர்ந்துவரம்
பகன்றுமொழி லோங்கியென்றும்
இலகிவரும் சுரபிமலை யிழிந்திரண்டு
கரையும்வளத்தெல்லாஞ்சேர
அலகினலர் தருநதியி னருகுடைத்தா
யெந்நகர்க்கு மழகாயான்ற
திலகமெனச் சிறந்ததெனு முத்தமலா
ளையமுறையுந் தேசநேசன்

காராளர் குலத்துதித்த காமாக்ஷி
பிள்ளையெனுங் கவிஞனாய்ந்தே
ஏராள மன்பதைக ளிருந்துவரு
மிந்தியா வென்னுந்தேசத்
தூராளர் படுந்துயர மொருங்குணர்ந்து
நீப்பதற்கோ ருறுதிகொண்டு
தாராள சிந்தையுடன் சிறைபுகுந்த
தலைவர்பெருந் தன்மைநோக்கி

அத்தலைவர் காந்திமகா னாதியர்மே
லமிழ்தமென வன்பினாய்ந்து
கத்துகடற் புவியிடத்துக் கற்றவரு
மற்றவரும் களிப்பீள்ளுறச்

சத்திபெறுந் தமிழ்மொழிபாற் சுதியிசையுந்
தாளமுநற் சுவையுந்தோன்றப்
பக்தியுடன் கீர்த்தனமாய்ப் பாடியவித்
தனனிதனைப் பாரீர்மாதோ.

---

ஷியூர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

## கோ. அந்தோனிமுத்துப்பிள்ளை அவர்கள்

இயற்றியது

### அறுசீரடிவிருத்தம்

ஆசாரத் திருத்தமுத லறிவுகொடுத்
தெப்பகையு மடக்குமிந்து
தேசாபி மானிகள்மேல் ரமணியகீ
தம்பாடிச் சிறப்பித்தானால்
வாசாம கோசரமாய் வயங்குபரம்
பொருளையென்று மனத்திலுன்னிப்
பூசாபலம் பெறும்பாளையந் திகழ்கா
மாக்ஷியெனும் புலவரேறே.

---

ஷியூர் மகா-ள-ள-ஸ்ரீ

## ந. சேஷாத்திரி நாயுடு அவர்கள்

இயற்றியது

### ஆசிரியவிருத்தம்.

மதியுலவு புதுமாட வளமைபெறு வைதீக
மங்களமிகுத்த செல்வம்
மாருத சோபிதோத் தமபாளையம் பதியில்
வாழ்ந்திடு மூபேந்ரனைக

நிதிபாவு கங்கா குலாதிபதி நீதிபதி
நேர்பழனி யாண்டிமகிபன்
நிகாற்றிடுந் தவத்தா னுற்பவித்த குண
நேயகாமாக்ஷி வள்ளல்

துதிபாவு தேசிகைங் கர்யமே வேதாந்த
சுருதிமுடி பென்னநின்று
சொல்லி யுடல்பொருளாவி தனையிய்த்திடுந் தேசத்
தொண்டர்தம் பதமலரின்மேல்
அதியிரச மோடுநவ ரசமொடு மலங்கார
மாமீதெனப் பழிச்ச
வற்புத மெனும்படி நமிந்தரம ணியகீத
மறைந்தா னவன்வாழியே.

---

உத்தமபாளையம் மகா-ள-ள-ஸ்ரீ

## U. P. அப்பாவு உபாத்தியாயர் அவர்கள்

இயற்றியது

## அறுசீரடிவிருத்தம்

நித்திலம்வைத் தொளிர்தரு பொன்மணிமாடி
முகடுறவே நிலவியோங்கும்
உத்தமபா ளையம்பதியில் கங்கைகுல
திலகமென உலவுஞ்சீரான்
முத்தமிழி னிசைமுழுதும் பெரிதுணர்கா
மாக்ஷிபிள்ளை முறையாச்சொற்ற
வித்தகஞ்சேர் ரமணிய கீதமதும்
சொற்சுவையில் மிகவும்நன்றே.

இந்நூலாசிரியர் மாதுலர் உத்தமபாளையம் ஜோசியர்

மகா-ள-ள-ஸ்ரீ

S. மருதநாயகம் பிள்ளை அவர்கள்

இயற்றியது.

அறுசீரடிவிருத்தம்.

சுரும்பினம் பாண்மிழற்று மலர்வாய்ந்த நந்தவனஞ்
சூழ்ந்தெந் நாளும்
பெரும்புக ழுடைந்ததிரு உத்தமபா ளையம்பதியிற்
பேராய் வாழும்
அரும்புலவ னென்மருகன் காமாக்ஷி கீர்த்தனமு
மறைந்தா னஃது
கரும்புரசந் தனில்நல்ல தேனமிர்தம் கலந்ததெனச்
சுழறலாமே.

---

இந்நூலாசிரியர் மருகன் உத்தமபாளையம் கம்பவுண்டர்

மகா-ள-ள-ஸ்ரீ

K. மருதமுத்துப்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

அறுசீரடிவிருத்தம்.

சீர்கொண்ட உத்தமபா ளையம்பதியி லனுதினமுஞ்
சிறந்து வாழும்
வார்கொண்ட புயமேவு மென்மாமன் காமாக்ஷி
வள்ளல் சொன்ன
பேர்கொண்ட தேசீயகீத மதையா ராய்ந்து
பேசுங் காலை
ஏர்கொண்ட பூமிதனிற் கடலமிர்தந் தனக்குமிக
ரியம்ப லாமே.

---

உ

ஸ்ரீ முருகன் றுணை.

இந்துதேசாபிமானிகள்

# இனிய ரமணியகீதம்.

## விநாயகர் துதி.

சந்தவிருத்தம்.

மாசனத்திரளே மிகுத்திடுமா மகத்துவ இந்தியா
வாசமுற்றிடவே யுழைத்தநி மாதவத்தி லுயர்ந்திடும்
தேசபக்தர்கள் மீதூறற்கவி சேயனித்தநி பாடவே
பாசம்வைத் தினிதேயென்க்கருள் பாலவிக்கின மூர்த்தியே.

## சரஸ்வதி துதி.

எழுசீரடிவிருத்தம்.

படிமீதுதொண்டர் படைவீரர்மீது பரிவோடு பாடநிதமே
அடியேனென்னுவி லினிதாயிருந்துன் னருளோடு கீதமருள்வாய்
வடிவானவுந்தனடியாரவிந்தமகிழ்வோடிசைந்துதொழுதேன்
கடிமேவுகஞ்ச மலர்மீதுலாவு கலைவாணிரத்ன மணியே.

## தாய்தந்தையர் துதி.

கலித்துறை.

அந்திபகலா புமையாள்தனதி னடிபணிந்து
தொந்திசரிய வடியேன்றனையே சுமந்துபெற்ற
புந்திமிகுந்தவென் தாய்தந்தையாரிரு பொற்சரணம்
முந்திவணங்கி அவர்தம்புகழை மொழிகுவனே.

## அவையடக்கம்.

அறுசீரடி விருத்தம்.

மாமயில் தனக்குமுன்பு வான்கோழி நடித்தல்போலும்
கோமளக் கருடன்முன்பு கொதுகிளம் பறந்தாற்போலும்
பூமலி கமலமுன்பு பூத்திடுங் குமுதம்போலும்
பாமணம் நிறைந்தோர்முன்பு பாமரன் பகரும்நூலே

## பாரதமாதா துதி.

நீகைவிடத்தகுமோ என்ற மெட்டு.

பல்லவி

1. மாதாவுனை நம்பினேன்
செல்வமலியுஞ் ஜெயபாரத (மா)

அநுபல்லவி

கோதிலாதஇந்தி ராதிதேவர்முதல்
வேதமுனிவோர்கள்தினம் நீதமுடனேகொண்டாடும் (மா)

சரணம்

காட்சியானசுய ராச்சியந்தனக்கே
காரணமாய்விளங்கும் கடவுள்நீயே
தேர்ச்சிமேவியகாமாக்ஷி தாசன்சொலும்
செந்தமிழைச் சிந்தையிலுகந்தருளும் (மா)

ஷை

ஏமிமாயமோசேச்சிபோத்திவி என்ற மெட்டு.

பல்லவி

2. பாரதமாதா பாதம்போற்றுவோம்
பனுவல்லோர்களே நல்லோர்களே (பா)

அநுபல்லவி

வேறுஏது நமக்குத்தாட்சி
விரைவுடன்கிடைத்திடும் கருதும்சுயாட்சி

சரணம்

என்னும்வரந்தனை ஈயுமுதாரி
இந்தியமக்களை ஈன்றகெம்பீரி
கண்ணியன்காமாக்ஷி கவிக்குபகாரி
காசினியோர்புகழ் மாசில்லாவாரி (பா)

## வந்தேமாதரம்,

### ராமஜெயமே என்ற மெட்டு.

பல்லவி

3. வந்தேமாதரம் வளர்பயோதரம்
மக்களாகியநமக்கு மிக்கவூர்சுகாதாரம் (வ)

அநுபல்லவி

வல்லமையுள்ள நாமெல்லாஞ்சகோதரம் (வ)

சரணம்

சித்தமுமொன்று சேருங்கள்
ஒத்துழைக்கவே வாருங்கள்
நத்தியேகிருபை கூறுங்கள்
கைத்தொழில்தனைக் கோருங்கள்
சும்மாநமக்குள்ளே யென்னவாதம்
ஒன்றாய்நடத்துவதல்லோ நீதம்
நாம்சுமக்கும்சுமை யகாதம்
கவிசொல்லுங்காமாக்ஷி சொல்வேதம் (வ)

---

## இந்துநாட்டுச்சிறப்பு.

### வேலா நீகெதியே என்ற மெட்டு.

பல்லவி

4. இந்துநாடே நாடு
இன்பமீயுமோக்ஷ வீடு (இ)

அநுபல்லவி

மந்திரமுனிவர் வாசம்
வன்மையுடன்செய்த தேசம்

சந்திரகுலமன்னர்கள்
தங்கியதிகழ்கைலாசம் (இ)

சரணம்

நாலுவேதம் ஆறுசாஸ்திரம்
நலமுடன்தொனிக்கும் க்ஷேத்திரம்
சீலமுடன்கேட்கலாம்
தினந்தோறுங்கடவுள்தோத்ரம் (இ)

நித்திலங்கொழிக்கும் வாரி
நேர்த்திசேர்சிந்து காவேரி
எத்தனையோபுண்யநதி
ஏகும்வளமுள்ளபாரி (இ

முரசுசங்கு வேணுகானம்
முழங்கிடுந்தமிழ் மாகாணம்
தரணியோர்தினம்புகழும்
தாசர்கள்ஜன்மிக்கும்ஸ்தானம் (இ)

சந்ததம் பாரதிமாமி
சஞ்சரிக்கும் புண்யபூமி
பைந்தமிழ்பாடுங்காமாக்ஷி
பாங்குடனேவாழும்நேமி (இ)

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

நீயேதுணைஎன்றுநம்பினேன் என்ற மெட்டு.

பல்லவி

5. ராமகிருஷ்ணபரமஹம்சர்போல்
உயர்ஞானியுண்டுமோ (ரா)

அநுபல்லவி

சாமளவண்ணன்தாளிணையேதினமேதொழும் (ரா)

சரணம்

கருத்திலாசை வெறுத்தயோகி
கௌபீனமணிந்த தேகி
உரித்துமிகுந்தஉத்தமசற்குருரத்தினம் (ரா)

நன்மையுள்ள பிரம்சாரி
நம்பினோர்க் கருளும்வாரி
மும்மலந்தனைமுற்று மொழித்திடும்ரக்ஷகன் (ரா)
மாசிலாத கோசமைந்தும்
மன்னிய கரணம்நான்கும்
தோஷமூன்றும்சுழிவுடன் மனதினிலழிந்திடும்
புவிதனிலே கவியரீராய்ச்சி
பொற்புடன் செய்யுங்காமாக்ஷி
நவரசகீதம்நாட்டமதாகவே கேட்டருள் (ரா)

## ஸ்வாமி விவேகானந்தர்

### ஐயோ நானென்னசெய்வேனென்ற பியாண்டுமெட்டு.

கண்ணிகள்

6. சாமிவிவேகானந்தம் போதிக்கும்
சதுர்வேதமேமெஞ்ஞானப் பிரபந்தம்
தத்துவமுற்றிலுங்கற்றவர் வேதாந்த
சங்கமும்வெகுமங்களமொடு ஸ்தாபித்தவர்
திரிகாலவர்த்தமானி இருளென்னும்
ஜெகமாய்கையையொழித்த சுக்ஞானி
தேஜசுமேவியலாவண்யன் எப்போதும்
தேசிகனிருசேவடிதொழும்திவ்ய புண்யன்
காங்ரெஸ்தோறும்பிரசங்கம் இங்லண்டில்
களிகூர்ந்துமேசெய்துவந்த சிங்கம்
காசினியோர்புகழ்மாசீலன் காமாக்ஷி
கவிமலர்தனையணிந்திடுமுயர்கண்ய லோலன்

## சாரதாபீடஜகத்குரு சாமிசங்கராச்சாரி

### துலங்குசெம்பொன்கோபுரம் என்றமெட்டு.

கண்ணிகள்

7. தகுந்தஜகத்குருவாக விளங்கும்
சாமிசங்கராச்சாரிதத்துவஞான போதமே

தொண்டர்கள்மெச்சும்சாத்வீகமுள்ள நீதமே

சகலருமகிழ்வொடுபதமலர் தொழுதிடும்
சாமிசங்காராச்சாரிதத்துவஞான போதமே
தொண்டர்கள்மெச்சும்சாத்வீகமுள்ள நீதமே

தண்டுகமண்டலமங்கையி லேந்திய
சாமிசங்கராச்சாரிதத்துவஞான போதமே
தொண்டர்கள்மெச்சும்சாத்வீகமுள்ள நீதமே

சாதகமானசுதேசியமீதினிலே தயவாகிய
சாமிசங்ராச்சாரிதத்துவஞான போதமே
தொண்டர்கள்மெச்சும்சாத்வீகமுள்ள நீதமே

உகந்தஹோம்ரூல்தனை முன்னிட்டு
உயர்ந்தசிம்மாசனந் தனைவிட்டு
மகிழ்ந்துவெஞ்சிறை தன்னிற்பட்டு

மாதுமைபாகனைக் கும்பிட்டு
மாட்சியாய்மேவும்வை தீகன்கவி சொல்லுங்
காமாக்ஷிபணியுந்தெய்வீகன் (தகு)

## சாமி சிரத்தானந்தர்

### சங்கற்பமே என்ற மெட்டு.

பல்லவி

3. சிரத்தானந்தர் தெய்வசம்மந்தர்
தேசவிசுவாச முகுந்தர் (சி)

அநுபல்லவி

கருத்திலாசை களைந்தயோகியே
காவிகாம்பரமணிந்த தேகியே (சி)

சரணம்

மும்மலந்தவிர்த்த சுயம்பிரகாசியே
முற்றிலுங்கடந்த சந்யாசியே
நன்மையுள்ள ஞானோபதேசியே
நாவலன்காமாக்ஷி புகழ்நேசியே (சி)

# தாதாபாய்நௌரோஜி

ஹாதிலதாரியாரே என்ற மெட்டு.

பல்லவி

9. தாதாபாய் நௌரோஜீ
போதுண்டோ விஸ்வாசி
தன்மையுள்ள சுதேசி (தா)

அநுபல்லவி

மாதர்கலாசாலை வைத்து
மாணவர்க்குப தேசித்து
மார்க்கமுடன்வந்ததீரன் மன்னியபரோபகாரன்
மாசில்லாத கெம்பீரன் (தா)

சரணம்

சுயராஜ்ய விதையைநட்டு
சுதந்திரத் தண்ணீர்விட்டு
துணிந்துபயிர்செய்த தங்கம்
சொல்லொண்ணுதமூல சிந்தம்
தொண்டர்கள்மெச்சும் துங்கம் (தா)

நாடு செழித்திடவே
நம்மவர் களித்திடவே
நன்மைசெய்துவந்த புண்யன்
நற்குணமுடைய கண்யன்
ஞாலம்புகழும் தன்யன் (தா)

பத்திமணிமாடங்கள் சூழ்
பாளையநகர்தனில் வாழ்
பாவலன்காமாக்ஷிதாசன் பாடலுக்குகந்தநேசன்
பாசமுள்ள உல்லாசன் (தா)

## லோகமான்யபாலகங்காதர திலகர்

கௌரிசுதா திருக்கருணை கார்த்திகேயா
என்ற மெட்டு.

பாட்டு

10. பாலதில்சுரைப்போல்கிடைத்திடுமோ
தேசாபி மானி

உலகந்தன்னிலவரும்நல்ல உண்மையுள்ள தியானி
நம்மைஉபசரிக்கும் ஞானி
வெகுஒழுங்குள்ள பிரதானி
உரிமையுடன்தேசத் தொண்டுபுரியுந்திருமேனி

தொகையரு

உயர்வோடுஇந்தியர்சுயராஜ்யமடைய
உரித்தாகஉழைத்தசீமான்
ஒயிலோடுசிவாஜிபிரக்யாதியைப்பற்றி
உபந்யாசம்செய்தபூமான்

பாட்டு.

கணிதசாஸ்திரத்தில் தேர்ச்சியுற்ற
தர்மப்பிரபு டீகன்
க்ஷேத்திரம்தோறும்புகழும் திவ்யநாகரீகன்
மிகுதேஜசுள்ள வாகன்
மனத்தெம்புடைய தேகன்
சிறந்தாத்னகிரிநகரில் பிறந்தசெல்வயோகன்

தொகையரு

திகழ்வேதகுலந்தனிலவதாரம்செய்ததோர்
ஜெயவீரசூரதீரன்
சீரோடுமாணவர்க்காங்லேயபாஷையும்
செப்பியேவைத்தஉதாரன்

பாட்டு

தேசபக்தர்கள் தினங்கொண்டாடும்
பரஸ்பர விஸ்வாசன்

சித்தர்தன்னிலேகாமாக்ஷிசிந்திக்கும் பிரகாசன்
ஒருதீதிலாத நேசன்
கவிதீட்டும்நல் விசேஷன்
திரிகரணசுத்தியுள்ள திருமுகவிலாசன் (பா)

ஷ

சுஜனஜீவனு என்ற மெட்டு.

பல்லவி

11. திலகர்போல்சாதுஇந்த ஜெகத்தினிலேதுபால (தி)

அநுபல்லவி

துலங்கும்புண்ணியன் நல்லதூயகண்ணியன்
சுயராச்சியவிதைதூவிய சுகிர்ததன்னியன்பால (தி)

சரணம்

கணிதசாஸ்திரன் கௌரீஸ்தோத்ரன்
காருண்ய பாத்ரன்
காலந்தோறுமே பொதுநன்மைக்
குழைக்கும் நல்லாத்ரன்
இனியவாக்கியன்கவி எழுதும்பாக்கியன்
ஏதமிலாதநீதன்காமாக்ஷி இறைஞ்சும்சிலாக்கியன்பால(தி)

ஷ

தேன்றுளிக்கும் என்ற மெட்டு.

கண்ணிகள்

12. சீர்மலிந்திடும்சுந்தர மிகுதிலகர்
பார்புகழ்ந்திடும்தொண்டர்களில்முந்தினவர்
ஏர்நிறைந்திடும்இந்தியர் சுதந்திரம்பெற
மந்திரமறைந்தவ ரிவர் (சீர்)

பேர்விளங்கிடும் செந்தமிழின்சங்கநிதி
ஜோர்மிகுந்திடும் வெண்கதரணிந்ததரன்
நீர்புனைந்திடும்நிமல னடியனுதினமும்
தொழுதுவரும் கமலமுகன் (சீர்)

மையணிந்திடும்நங்கையர்கள் கண்டுதினம்
மெய்மறந்திடும்சௌந்திரம் நிறைந்தமதன்
வையகந்தனில்மதியேஒரு வுருவாகிய
கருணாநிதியிவரே தகும் (சீர்)

# மகாத்மா காந்தி

## ஸ்ரீராமபாதமு என்றமெட்டு.

பல்லவி

13. காந்தியைவாழ்த்துவோம் காலடிபோற்றுவோம்
காவியஞ் சாற்றுவோம்

அநுபல்லவி

சாந்தகுணாளன் சமர்த்துள்ளதோழன்
ஜாதிபேதமேயிலாத புண்ணியவாளன் (கா)

சரணம்

தன்னுயிர்தனைப்போல் சாதுவாய்ப்பேணியே
மன்னுயிரனைத்தும் காக்குஞ்ஞானியே
சொன்னசொற்றவறு சுகுணநல்வாக்கியன்
தூக்கிசைக்குங்காமாக்ஷிபதம்கேட்கும்நல்லாரோக்கியன் (கா

௸

## ஒருசங்கதிபேசவேணும் என்றமெட்டு.

பல்லவி

14. வெகுகெண்யமோடுகாந்தி சொல்வதைக்
கேள்கேள் நெஞ்சகமே

அநுபல்லவி

புண்ணியமேயோர் வடிவாய்த்திரண்டு
புவியில்நம்மைக் காக்கவந்தவர்
எண்ணியபடியே பக்தியுஞ்சாதிக்க
ஈசுரனம்சமாய் ஏற்பட்டவர் (வெகு)

சரணம்

தேசநன்மைக்குத் தொண்டுசெய்து
சிறைக்கூடந்தனி லமர்ந்தவிற்பனன்
காசினிபுகழும் தாசன்காமாக்ஷி
காவியம்திக்கும் பாவலன் (வெகு)

ஷ

ஆனந்தமானந்தமானந்தமே என்ற மெட்டு.

பல்லவி

15. கேளுங்கள்காந்தியின் கீர்த்திப்பிரதாபத்தை

அநுபல்லவி

தாழ்வில்லாதநண்பர்களே தன்மைமிகுமன்பர்களே (கே)

சரணம்

ஆத்மஞானமுள்ள நற்குணசீலன்
ஆரியசோதரா கட்கனுகூலன்
சாத்வீகஎதிர்ப்பைக்கைக்கொண்டலோலன்
சந்ததம்தெய்வ பக்தியுள்ளகோலன் (கே)

தென்ஆப்பிரிக்காவெனுந் தேசத்திற்பண்டு
கீர்த்தியுடன்செய்து வந்ததோர்தொண்டு
பன்னூறும்பிரஜைகள் பரிவுடன் கண்டு
பக்ஷமாயின்றைக்கும் புகழுவதுண்டு (கே)

பார்புகழும்செய்ரா ஜில்லாவில்மிகுந்து
பயிருகள்சாவியாய்ப் போனதுதெரிந்து
தீர்வையும்வாங்கக் கூடாதெனத்துணிந்து
திட்டஞ்செய்தார்கவர்மெண்டாருக்கறைந்து (கே)

கதருடைதன்னை யணிந்திடும்நீதன்
கைராட்டினம்நாளும் சுற்றும்விநோதன்
பதிதனில்காமாக்ஷி போற்றிடும்பாதன்
பகவத்கீதைதனைக் கொண்டாடும்போதன் (கே)

ஷை

ஜாதிமாதமுதல்சேதிசுபவரு என்ற மெட்டு.

கண்ணிகள்

16. வேந்தர்புகழ்ந்திடும் சாந்தகுணமுள்ள
காந்தியோரவதாரியே நம்மிந்தியா
மாந்தர்குபகாரியே (வே)

பொதுவாகயெல்லோரு மதுபானங்கள்நீக்கப்
போதித்துவந்தபுண்யன் வைராக்கியமாய்ச்
சாதித்துவந்தகண்யன் (வே)

அந்நியதேசத்தின் ஆடைகூடாதென்று
ஆட்க்ஷேபித்தவிற்பன்னன் ஆழ்ந்தயோசனை
தீட்சண்யமுள்ளமன்னன் (வே)

மேட்டிமையோடுகை ராட்டினம்சுற்றிநம்
நாட்டுநூல்நூற்கும்படி நல்வழிதனைக்
காட்டினரேற்கும்படி (வே)

ஊக்கமுடனீசன் தீர்க்காயுள்தந்திவரை
காக்கவேணுமென்னாளும் காமாக்ஷிசொல்
வாக்கையெல்லோருங்கேளும் (வே)

ஷை

பாண்டியனீன்றமீனாக்ஷி என்ற மெட்டு.

பாட்டு

17. மகாத்மாகாந்திசந்யாசி போலுண்டோ
மந்திரோபதேசி
சகாயமுள்ளவிஸ்வாசி மெஞ்ஞான
சாஸ்த்திரவுல்லாசி (மகா)

தொகையறு

வாகுடனிந்தியர்வறுமையை நீக்கவே
வந்தவதரித்த புண்யன்
சாகாங்சூழ்ந்திடும்தாய்நாடு செழிக்கவே
ஜகமீதுவந்த கண்யன்

பாட்டு

தயாளமேவியமெய்யன் சாத்வீக
சற்குணதுய்யன்
தியாகமீய்ந்திடுங்கையன் ஆரியர்
தினந்தொழுமய்யன் (மகா)

தொகையறு

கைத்தொழிலபிவிர்த்தியும் செய்யவே
கருத்துடனுரைத்த பூமன்
அத்வைதசாஸ்திர முற்றிலுஞ்சரியாய்
ஆராய்ந்துணர்ந்த நேமன்
அஞ்சாதசித்தவைராக்யன் எழியோரை
ஆண்டிடும் சிலாக்யன்
இன்சொல்நிறைந்திடும் வாக்யன்காமாக்ஷி
இசைக்கருள் பாக்யன் (மகா)

௸

காப்பதுன்கடமை என்ற மெட்டு.

பல்லவி

18. காருண்யமோகனதாஸ் கரன்சந்திர
காந்திமகான்கொண்ட சாந்தவைராக்யமேபேஸ்

அநுபல்லவி

தாரணிபுகழும் வைசியகோத்ரன்
சமரசமதத்தைத்தழுவும் நற்பாத்ரன்
தத்துவஞானசாஸ்த்ரன் கரன்சந்திர
காந்திமகான்கொண்ட சாந்தவைராக்யமேபேஸ்

தொகையறு

ஆமதாபாத்தினில் சத்யாக்கிரகமெனும்
ஆசிரமமமைத்த புண்யன்
பாமணங்கமழிந்திய னபிப்பிராயமென்னு
மோர்பத்திரிகைவரைந்த தண்யன்

சரணம்

இரக்கசித்தமுள்ள அவதாரமூர்த்தி
என்னசொல்வேனவர் மகிமையின்கீர்த்தி
இவர்சொல்லும் வேதம்நேர்த்தி
கரன்சந்திரகாந்திமகான்கொண்ட சாந்தவைராக்யமேபேஷ்

## தொகையரு

பிளேக்கினால்வருந்திய இந்தியஜனங்களை
பிழைக்கவேசெய்த பூமன்
வளமுள்ள தீண்டாத்திருமேனியோர் மீது
வாஞ்சையேகொண்ட நேமன்

## பாட்டு

ஆன்றோர்மதித்திடும் நல்லுபந்யாசன்
அன்பன்காமாக்ஷி புகழும்சுதேசன்
ஆரியசமாஜன் கரன்சந்திர
காந்திமகான்கொண்ட சாந்தவைராக்யமேபேஷ்

## ஷை

## ஆறுமோஆசையையோ நான்கொண்ட துயர் தீருமோ என்ற மெட்டு.

கண்ணிகள்

19. காந்தியேநமதுகலிதீர்க்கவந்த வேதாந்தியே
கருணாகரனிவர்போலவேபுவி மீதினில்கிடையாதினி
நற்குணன்இந்துநாட்டிற்குழைக்க வந்தபற்குணன்
நவகண்டமும்புகழ்தங்கிய மதிவல்லவனென வந்திடும்

தியானியேஒருதீதிலாத பூர்வகியானியே
ஜெகமீதினிலிவர்கூறிடுமுபந்யாசமு முணர்வீர்களே
கண்ணியன்தாஸன்காமாக்ஷி கொண்டாடும்புண்ணியன்
கடிமேவியதருபோலவேநோடை மீந்திடுங்கரமேவளர் (கா)

ஷ

## 20 மகுடக்கும்மி

பிரசித்திபெற்றநம்காந்தியடிகளின்
　　பெருமைமையைச்சொல்கிறேன்புண்யோரே
பிரியத்தொடுமிகவித்தமுமிதயத்தினிலருள்
　　வைத்துமேபேதமில்லாமலேகேட்பீரே

பொற்புள்ளகுஜராத்சீமைதனைச்சேர்ந்த
　　போரிபந்தர்தனில்வாழும்பூமான்
புவியெங்கணும்புகழ்தங்கியதிருமங்கையும்
　　குடிகொண்டருள்போதவணிகர்குலசீமான்

தாயிடம்சொன்னதோர்சத்தியமூன்றையும்
　　தழுவியேவந்தபரமசாது
ஜகம்தினிலிவர்போலவேதாமாகிய
　　கிருபாகரன்தவம்புரிந்தாலுங்கிடையாது

இரவும்பகலுமாயன்னாகாரமின்றி
　　இகத்திற்றுழைத்ததேசாபிமானன்
எழிலோங்கியநமதாரியர்சுயராச்சியம்
　　தனையேபெறஇதமுடன்போதித்தசுக்ஞானன்

சுகதுக்கமிரண்டும்சமமாகப்பாவிக்கும்
　　சோபிதமுடையபிரபுடீகன்
துணிவாகவேஇருள்மேவியஜெயில்மீதினில்
　　சிலகாலமும்தொண்டூழியம்செய்தசாத்விகன்

அன்புடன்சகலஜீவராசிகளை
　　ஆதரித்தருளும்புண்யவாளன்
அரிதாகியசுயபாஷையிலபிமானமு
　　மிகவேயுளஆழ்ந்ததராமானசீராளன்

தேனுடிநாளும்பொன்வண்டினங்கள்
　　கூடிச்சிறகுலர்த்தும்தூயநீர்நாடன்
ஜெகமெச்சியதிருவுத்தமநகரத்தினில்
　　வளர்சற்குணசேயன்காமாக்ஷிதொழும்சேடன்

## மிஸ்டர் கோபாலகிருஷ்ணகோகலே

இப்பாருலகிலுள்ள நங்கையோ என்ற மெட்டு.

21. மிஸ்டர்கோபாலகிருஷ்ண கோகலேபோல
மேதாவியுண்டோ இந்தப் பூவிலே
அஷ்டதிசைபுகழும் அந்தமுள்ளகுபேரன்
ஆங்கிலம்தத்துவநூல் ஆராய்ச்சியுள்ளதீரன்

தொகையரு

ஆரியமாதாவினருமை புதல்வராய்
அவதாரம்செய்த பூமன்
அனுதியாயுள்ள ஜனோபகாரமே
அனுதினங்குடிகொண்ட நேமன்

பாட்டு

ஊரார்க்குழைக்கவந்த புண்ணியன்நாளும்
உலகாபிமானமுள்ள கண்ணியன்
சாரமுடனேசொன்ன சத்யமறவாநீதன்
தமிழுலகத்தோர்கொண்டாடும் சமர்த்துவமுள்ளபோதன்

தொகையரு

சட்டநிருபணசபையிலோர் மெம்பர்
ஸ்தானமாயமர்ந்த சிங்கம்
ஜகமீதொருநாளும்சலியாது அவர்செய்யும்
சாமாரியான பிரசங்கம்

மாறன்றனைப்போலெழில்வாய்ந்தவர் கா
மாக்ஷிதமிழ் தனையாராய்ந்தவர்
சீர்மேவும்லார்டுகர்ஷன் செம்மவிட்டிருந்து
ஸி, ஐ. இ. பட்டம்பெற்ற தீதிலாதகுருந்து

## ஸ்ரீமான்ரவீந்திரநாத்தாகூர்.

### அமாரநபி என்ற மெட்டு.

பல்லவி

22. ரவீந்திரநாத்தாகூர் நல்லமேதாவியே

அநுபல்லவி

சூவிஸ்தாரமுடன்கீதாஞ்சலி யெனும்நூலைப்பாடி
பவுனெண்ணாயிரம்வரை பரிசுபெற்றகீர்டி

சரணம்

பதிபோர்புகழும்பஞ்சாப் படுகொலையின்தருணம்
மதிப்பானசர்ப்பட்டத்தைவாபஸ்செய்தசற்குணம்
விஸ்வபாரதியென்னும் வித்யாசாலையமைத்து
சிஷ்டமுடன்கற்பிக்கும் தீக்ஷண்யமுள்ளவித்து
நேசமுடன்காமாக்ஷிகித்தங் கொண்டாடும்நீதன்
தேசவிரதந்தன்னை சிந்திக்குஞ்ஞானபோதன்

ஷை

### பூலோகமாய்கையிலே என்ற மெட்டு.

23. நவீனதேசபக்தர் ரவீந்திரநாத்தாகூர்
நல்லோபகாரன் சல்லாபமாரன்
நகரசஞ்சாரன் இங்லீஷ்பகருங்கெம்பீரன்
நமதுபாரதகண்டத்திற்கு சமர்த்துடனுழைக்குந்தீரன்
இரப்போர்க்கருளுந்தியாகன் சிறப்பார்ந்தநல்வாகன்
இஷ்டானுகூலன் கிட்டாநன்நூலன்
ஈடில்லாஸ்தூலன் ஒருகேடில்லாச்சீலன்
இப்புவிபுகழ்காமாக்ஷி நற்பதங்கேட்கும்விசாலன்

## லாலாலஜபதிராய்

### தில்குசதாதீயச்சமன் என்ற மெட்டு.

பாட்டு

24. லஜபதிராயெழுதும்விபாசம் நல்லோபதேசம்
நல்லோபதேசம் சற்றுமில்லையேதுவேஷம்

தொகையரு

திக்கோர்புகழ்ந்திடும் பாஞ்சாலநாட்டுக்குத்
திலகம்போல் விளங்குமன்னன்
தேடியநிதியெல்லாம் தர்மார்த்தமாகவே
செலவழித்துவந்த கர்னன்

பாட்டு

தேசநன்மைக்குழைக்கும்புண்யன் ஜீவகாருண்யன்
ஜீவகாருண்யன் எழில்மேவும்லாவண்யன்

தொகையரு

தயானந்தஆங்கில கலாசாலையொன்று
ஸ்தாபனம்செய்த போதன்
தாய்தந்தையில்லாத அனாதைக்குழந்தைகள்
தரித்திரம்தீர்த்த நீதன்

பாட்டு

பொற்புடன்பிரசங்கமாரி பொழியும்விஸ்தாரி
பொழியும்விஸ்தாரி கலைமலியும்நல்வாரி

தொகையரு

பஞ்சாப்பிலுதித்த தருமராஜனென்ற
பட்டமும்சிரசில் சுமந்தோன்
பாரோர்புகழ்ந்திடும் ஆரியசமாஜக்
காரியதரிசியா யமர்ந்தோன்

பாட்டு

நாவலன்காமாக்ஷிதாசன் நம்பும்சுதேசன்
நம்பும்சுதேசன் அதிஅன்புள்ளநேசன் (வ)

## பாபு ஆனந்தமோஹன்போஸ்

25 நாஹுன்னுசையாலே என்றமெட்டு.

பல்லவி

ஆனந்தமோஹன்போல்இனி அன்பர்கள்வாய்க்குமோபுவிமேல்

அநுபல்லவி

மாநிலம்புகழ்பிரசித்தன் நல்லமதியுள்ளதேசபத்தன்
ஒருமாசிலாப் பரிசுத்தன் (ஆ)

சரணம்

முக்குணமுள்ளவிசேஷன் வெகுமுதன்மையானபிடரேஷன்
ஹால்முகூர்த்தக்கல் நாட்டியநேசன் (ஆ)
ஆரியர்கட்கனுகூலன் அதிஅற்புதபிரசங்கசீலன்
நாளும்அவனிகொண்டாடும் நன்னூலன் (ஆ)
இயானமுடனந்திமாலைஉயர்கெண்ணியன்காமாக்ஷிநூலை
மனதில்கேட்பதே இவருக்குவேலை (ஆ)

---

# ஸர். பிரோஜிஷாமீர்வான்ஜிமேடா

## எஜித்தாதர்ப்புதேரி என்ற மெட்டு.

பல்லவி

26. பிரோஜிஷாமீர்வான்ஜிமேடா பெருமைக்காருமீடா

அநுபல்லவி

திராவிடசோதரர்கள் சிந்திக்குஞ்சுதேசன்
பரோபகாரமென்னும் பணியணிந்தநேசன் (பி)

சரணம்

ஆர்ந்தபம்பாய்கான்பரென்ஸில அக்கிராசனம்வகித்தோர்
நலம்வாய்ந்தமுன்விபாலிடியின் மகுடந்தரியாமகிபர்
மேல்நாடுதோறுஞ்சென்று மேன்மைபெற்றநீதன்
நம்வேல்சிளவரசமன்னர் மெச்சியபிரக்யாதன்
சிற்சிலசீர்திருத்தம செய்துவந்தபுண்யன்
உயர்சற்ஜனன் காமாக்ஷிசொல்லும்தமிழ்கேட்குங்கண்யன் (பி)

# கனம் டாக்டர் ராஷ்விஹாரிகோஷ்

## காக்குந்தெய்வமில்லைபா என்ற பியாண்டுமெட்டு.

பல்லவி

27. டாக்டர்ராஷ்விஹாரியே அண்டினபேர்
யார்க்கு முபகாரியே

அநுபல்லவி

ஊக்கமிகுந்திடும் புண்யசிரேஷ்டர்
உயர்வானசட்டம் திகழ்பாரிஸ்டர்

உத்தமன்காமாக்ஷிநித்தமும்கொண்டாடும்சத்தியன்
உளமகிழுடன்பொதுநலந்தனக்குழைத்திடும்நீதன்
உலகினில்வள்ரிரவலர்துயர் ஒழித்திடும்நாதன்

## பரோடா மகாராஜா கயக்வார்.

### மதீனமேமோராசையா என்ற மெட்டு.

பாட்டு

28. பரோபகாரசுசீலன் பரோடாமன்னன்கயக்வார்
அருமையுடையபத்தன் ஆசாரச்சீர்திருத்தன்

தொகையரு

மகாராஷ்ட்டிரகுல மரபினிலுதித்த
மகாராஜ கெம்பீரன்
ஜெகமெங்கும்புகழும் சிம்நாபாயரசியை
திருமணம்புரிந்த வீரன்

பாட்டு

செங்கோல்வழுவாநீதன் தீதில்லாதவிநோதன்

தொகையரு

விவசாயக்கைத்தொழில் வேரூன்றிநிற்க
விர்த்தியும்செய்த புண்யன்
தவறொன்றுமில்லாத தர்மாஸ்பத்திரியும்
ஸ்தாபனம்செய்த கண்யன்

பாட்டு

சாந்தகுணாளன் சர்வதயாளன் (ப)

தொகையரு

திட்டமாய்நாட்டினில் க்ஷேமாபிவிர்த்தி
செழித்தோங்கச்செய்த பூமன்
கட்டாயக்கல்வி கற்பிக்கும்படியாய்
கட்டளையளித்த க்ஷேமன்

## பாட்டு.

காமாக்ஷிதாசன் கவிக்குகந்தராஜன் (ப)

## பாபு பெபின்சந்திரபால்.

பாலாபிஷேகப்பழனிமலை என்ற மெட்டு

பல்லவி

29. பாபுபெபின்சந்திரபால் தனைப்போலிந்தப்
பார்தனிலே தேசபக்தனேது

அநுபல்லவி

சோபிதமாகநம் பாரதநாட்டிற்குத்
தொண்டுசெய்யவந்த புண்யசாது (பா)

தொகையரு

நியூவிந்தியாவென்னும் வாராந்தரப்பத்திரிகை
நேர்த்தியாய்நடத்தி வந்தோன்
அயல்நாட்டுச்சாமான்கள் விலக்கும்படியாகி
அன்புடனே யறைந்தோன்

முடுகுசந்தம்

அனைவருமகிழ்ந்திடும் பொதுநலஊக்கன்
மனவுறுதியுடைய புனிதசன்மார்க்கன்

பல்லவியெடுப்பு

மங்காதபேர்பெற்ற வங்காளமாகாண
மெங்கும்சிறந்து விளங்குமன்னன் (பா)

தொகையரு

தேசியக்கல்வி போதிக்கும்படியாய்
சிரத்தையுமெடுத்த புண்யன்
மாசேதுமில்லாப் பஞ்சாயத்துக்கோர்ட்டு
வைப்பதற்குழைத்த கண்யன்

முடுகுசந்தம்

மகிதலம்புகழ்ந்திடும் ஜனவுபகாரன்
முகவுசிகாமுனா மதனசிங்காரன்

## பல்லவியெடுப்பு

முத்தமிழின்வாசம் நித்தங்கமழ்ந்திடும்
உத்தமன்காமாக்ஷி நத்தும்யோகன் (பா)

## பிர்மஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர்

பத்தொன்பதாம்நூற்றுக்குமே லென்ற மெட்டு.

கண்ணிகள்

30. சுதேசமித்திரன்பத்ராதிபர் சுப்ரமண்யசுமுகனைப்போல்
மதாபிமானமுடையோர் மண்ணுலகிலேதினிமேல்
மன்னர்களனுதினமும் மெச்சும்போதன்
சொன்னசொல்தவறிடாத சத்யநீதன்

போதுமான அநுபவமும் பொதுஜனஉபகாரமும்
பூதலந்தனிலிவர்க்கேபொருந்து மென்றுசொன்னால்தகும்
பூசுரர்குலந்தனிலே வந்தபூமான்
மாசில்லாயீசனடி போற்றும்நேமன்

ஆரியர்கள்நிலைமைபூராய் அடிக்கடிதெரிவதற்கு
பேரானநமதுமகாபிரிட்டீஷ் ராஜாங்கத்தார்க்கு
பேப்பரிலெழுதிவந்த கருணைச்சித்தன்
கேட்பவரதிசயிக்கும் தேசபக்தன்

வாளைகள்கமுகிலேறி வாகுடனேகனியுதிர்க்கும்
பாளையம்க்ஷேத்திரத்தில் பந்தானமுடன்வசிக்கும்
பக்தர்புகழ்ந்திடுங் காமாக்ஷிதாசன்
நற்றமிழாமோதிக்கு மந்தஹாசன்

## அலிசகோதர ஸ்ரீமான்கள்

சுயராஜ்ஜியமதிகதூரமில்லை என்ற மெட்டு.

பாட்டு

31. ஞாலம்புகழுமலிசோதரர் தனைப்போலே
நண்பர்சிகாமணிகள்கிட்டுமோ யினியேலே
சீலமுள்ளபாரததேவி கிருபையாலே
சிறைமீட்சிபெற்றுவந்தார் நமக்குமுன்னாலே

தொகையரு

தயாநிதியாகிய ராமலட்சுமணர்போல்
சகோதர வாஞ்சையுடையோர்
சுயாட்சிக்குழைத்திடும் மகாத்மாதனக்கிரு
தோள்களைநிகர்த்த படையோர்

பாட்டு

சத்தியமறவாதஉத்தம இஸ்லாமியர்
ஜன்மபூமிக்குழைக்கு மதாபிமானியர்
பக்திவைராக்கியம் தங்குமேதாவியர்
பரோபகாரமுள்ள சுகுணசுதேசியர்

தொகையரு

சிப்பாய்க்கலகத்தில் ஆங்கிலேயர்க்குதவி
செய்ததோர் மரபினுளர்
எப்போதும்பிரசங்கம் இனிவாகவேசெய்யும்
இயல்பான கண்யவாளர்

பாட்டு

பிரியமுடன்காமாக்ஷிகவிதனைக் கேட்கும்பேர்கள்
பீஅம்மன்வயிற்றினில் ஜெனித்தபுண்யோர்கள்
உரிமையாய்நாயன்பாதம்பணிந்திடும்நல்லோர்கள்
உயர்தரமுள்ளகல்வி கற்றுணர்ந்தோர்கள்

ஷை

அற்புதபூதமலையாகியரப்பர்தோட்டம்
என்ற மெட்டு.

கண்ணிகள்

32. முகம்மதலிஷவுக்கதலி மொழியும்வாக்யம்
நல்லமுதறிவுடையபேர்க்கு முக்யசிலாக்யம்
புவிதனிலுடன்பிறந்த புண்ணியோர்கள்
தூயபுத்தியிற்பிரகஸ்பதி போன்றபேர்கள்
திருமகளுறை திகழைஸ்வரியர்
அதிதிடமுளபொது நலகைங்கரியர்
உயர் அருமை மிகுந்திடும்சாதுரியர்
ரகுமான் அடியிணை தொழுதிடும்நற்பிரியர்

ஒத்துழையாமைதனக்கு உழைக்கும்பேர்கள்
காந்திஉபதேசந்தனைப்புகலும்உரித்துள்ளோர்கள்
பாவலன்காமாக்ஷிபுகழ் பாக்கியவான்கள்
ஒருபக்ஷபாதகமில்லாத பக்திமான்கள்

௸

## ஆனந்தச்சோபனமே என்ற பியாண்டு மெட்டு.

### துக்கடா

33. மவ்லானாமுகம்மதலீ மதியூகிஷவுக்கதலீ
மாருதபஞ்சகலி மாவோதும்கீதவொலி
மனஊக்கமேவிய வல்லசித்தர்
அனைவோர்க்குவேண்டிய புண்யபக்தர்

மலர்சூடியஜெயபாரத மாதுபாதம்
நலமாகவேதுதியேசெயும் ஞானபோதம்
மாமாக்ஷிபெற்றுவளர் பாக்கியவான்கள்
காமாக்ஷிசொற்கவிதை கேட்கும்மகான்கள்

---

## ஸ்ரீமான் பண்டிதமோதிலால் நேரு

34 கார்த்திகா நித்யகல்யாணா என்றமெட்டு.

### கண்ணிகள்

பண்டிதமோதிலால்நேரு பக்திக்கியாரிணைகூறு
கொண்டாடும்கற்பகத்தாரு கோதில்லாத்தேசியமேரு
பஞ்சாயம்தீர்க்கும்பிரதானி பண்புள்ளதேசாபிமானி
அஞ்சாததத்துவஞானி அரனடிபணிந்திடும்தியானி

கல்கத்தாகாங்கிரஸில்சென்று காந்தியின்பக்கலில்நின்று
சொல்குற்றமில்லாமலன்று தொடங்கியபிரசங்கம்நன்று
கவிமழைபொழியும்சங்கீதன்காமாக்ஷிகொண்டாடும்போதன்
புவியெங்கும்புகழும்பிரக்யாதன்பொறுமைசேர்நற்குணநீதன்

## ஸ்ரீமத் சித்தரஞ்சனதாஸ்

கொஞ்சம்சங்கடமா என்றமெட்டு.

35. சித்தரஞ்சினதாஸ்
நல்லதேசபக்தியுள்ளநேசவிஸ்தாரியே (சி)

சித்திதரும்ஒத்துமையின்தத்துவம்நடத்திவரும்
ஜெகமதில்வெகுஉரிமையதுடன்
பொதுநலமதுகருதியதரன்

சீலமதானதிராவிடர்மீதினிலேதயவாகிய
சிறைமேவியஜெயசாலியே
மறையோர்புகழ்மதியூகியே (சி)

பத்தர்புகழும்சௌ பாக்கியவுல்லாசன்
பாரதநாட்டிற் குழைக்கும்விஸ்வாசன்
வித்வசிரோன்மணி காமாக்ஷிதாசன்
விஞ்சுதமிழ்தனைக் கேட்கும்சுதேசன்

விகசிதசதாணி தேகன்
விதரணைமருவிய யூகன்
முகவசிக்ரமுள வாகன்
முகில்தனைநிகர்த்திடும் தியாகன் (சி)

வேறு

சூரகுலசம்மாரா என்றமெட்டு.

பாட்டு

36. சீலமுள்ளசுதேசன் திகழ்சித்தரஞ்சனதாசன்
தெளிவாயெழுதும் இதிகாசன் (சீ)

தொகையறு

பெருமையாய்நாகப்பூர் காங்கிரஸ்சபைதனில்
பிரசங்கம்செய்த பூமன்
உரிமையாய்எஞ்ஞான்றும் ஜென்மதேசத்திற்கு
உழைத்திடவந்த சேமன்

பாட்டு

காந்தியடிகள்நேயன் உயர்கண்யமுள்ளசகாயன்
கதரேயணியும் எழில்தூயன் (சீ)

தொகையரு

மதபேதமென்பதே மனதினிலெண்ணாத
மதியுள்ள போதன்
பொதுவர்களெப்போதும் இருதயந்தன்னிலே
பொதுநலங்கருதும் நீதன்

பாட்டு

சான்ரோர்மதிக்குயோக்யன் கவிசாற்றுமினியசொல்வாக்யன்
தாயன்காமாக்ஷிபுகழ் பாக்யன் (சீ)

ஸ்ரீமான் அரவிந்தகோஷ்

தந்திடுவாய்என்னதான்கேட்குருயென்ற
பியாண்டு மெட்டு.

துக்கடா

37. அரவிந்தகோஷ் கல்வி அறிவுள்ளதாஸ்
அவர் அறையுமிங்லீஷ்லெக்சர் அமிர்தமேபேஸ்
அஞ்சாதமனதீரன் பஞ்சாயவிவகாரன்
அன்பார்ந்தகெம்பீரன் நம்போன்ரோர்க்காதாரன்
ஆரியமதவிஸ்வாசன் காமாக்ஷி அரியகவிமலரணியும் (அர)

ஸ்ரீமான் யாகூப்ஹாசன்

ஐயாபழனிமலைவேலா என்ற மெட்டு.

கண்ணிகள்

38. மேலானதெய்வ விஸ்வாசன்
திருமேனியுள்ள யாகூப்ஹாசன்
நாலாகலையுணர்ந்த போஜன்
சென்னைநவீனகிலாபத்தி நேசன் (மே)
ஏழைஎழியவர்கள் மீது
அதியிரக்கம்வைத்தாதரிக்கும் சாது
தாழ்வுநவிலமுடி யாது
அவர்தன்மைக்கெவருய்நிக ரேது (மே)

துருக்கிமகிபர்களின் பேரு
நாளும்ஜொலிக்கவந்தமக மேரு
உருக்கமுடன்சாத்வீகப் போரு
செய்யும்உயர்தரமேவிய ஏறு (மே)

உலகம்படுந்துயரைக் கண்டு
தானும்உழைப்பதற்கெண்ணமுங்கொண்டு
நிலைமையுடன்தேசத் தொண்டு
செய்யும்நேர்மையைஎன்சொல்வேன்விண்டு (மே)

காமாக்ஷிபுகழும்சம் பன்னன்
திகழ்காரைப்போல்கொடையீயு கர்னன்
மாமாக்ஷிபெற்றுவளர் மன்னன்
ரகுமானடிபணியும்விற் பன்னன் (மே)

## கனம் டாக்டர் கிச்சிலு

## சந்திராசரசவிநோதா என்ற பியாண்டு மெட்டு.

துக்கடா

39. நாளும்கிச்சிலு மொழியே
கேளும்முக்கிய வழியே
நம்மையாளவந்த நற்குணசுடரொளியே

நலமருளும்வர துங்கன்
கலைபொழியும்பிர சங்கன்
நயமானகுணசீலன் ஒயில்மேவும்தனபாலன்

நாட்டுக்குழைத்திடும்நண்பன்
ராட்டுச்சுழற்றிடு மன்பன்
ஞானமிசைகாமாக்ஷிநவின்றிடுமழகியகவியீது (நாளும்)

## கனம் டாக்டர் சத்தியபால்

## தென்பஜானுதென்பஜானு யென்ற மெட்டு.

பல்லவி

40. சத்தியபாலு சத்தியபாலு
தனயதாக்ஷிண்ய மேவியதீக்ஷண்யனும் (ச)

அநுபல்லவி

பத்திரிகைநடத்திடும் ராஜவிஸ்வாசன்
பண்டிதர்பாமரர் மெச்சும்வியாசன்
பாரின்நன்மைக்கஸ்திவாரக் கல்நாட்டும்விசேஷன் (ச)

சரணம்

கௌரவமுடைய தேசோபகாரன்
காமாக்ஷிதாசன் மதிக்குமெய்யாரன்
கருதும்சத்யாஹிரக விரதமனுஷ்டிக்கும்தீரன் (ச)

## ஸ்ரீமான் பண்டித மதன்மோஹன் மாளவியா
## ஜெயராமா என்ற மெட்டு.

பல்லவி

41. மதன்மோஹன் பண்டித
மாளவியாபோல்வருமோ பகர்வீர் (ம)

அநுபல்லவி

பதிமீது சந்ததம்
பாசமோடுதேசசேவை புரிந்திடும் (ம)

சரணம்

மனஊக்கன் வலிவுள
மன்றுள்தன்னில் நின்றுபந்யாசித்திடும் (ம)
தினந்தோறும் அன்புடன்
தீக்ஷண்யன்காமாக்ஷி தாசன்கவிக்கருள் (ம)

## ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி
## உனைநானென்றும்அகலேனென்னு
## மென்ற மெட்டு.

கண்ணிகள்

42. குவலயம்புகழும் ராஜகோபாலாச்சாரி
கூர்மையுடனேலெக்சர் கூறும்விஸ்தாரி
கொடையேதரும் உபகாரி
கோதிலாதசாந்தகுணக் குன்று
கொண்டகொள்கைமிகவும் நன்று (கு)
புத்தகமோசுமுகம்படிவைப் புகழும்நற்பிரியன்
பூபாலர்களுமெச்சும் புத்திசாதுரியன்

பொறுமைமிகு மனுகூலன்
பொதுநலந்தனைக்கருதும் தூயன்
புனிதனுங்காமாக்ஷி நேயன் (கு)

## ஸ்ரீமான் பொம்மாஞ்சி

## மகமாயிபைரவிமாகாளி யென்ற மெட்டு.

பல்லவி

43. புவியோர்புகழ்ந்திடும் உபகாரிகனம்
பொம்மாஞ்சியேபெரும் வியாபாரி (பு)

அநுபல்லவி

நவிலுங்கோடீஸ்வரன் நல்லஉயர்தரன்
லக்ஷக்கணக்கானதிரவியமே காங்ரெஸ்
நற்சபைக்களித்திடும் இருதயமே (பு)

சரணம்

காமாக்ஷிகீதமே கருதும்நற்போதமே
காசினிதனிலே நீடூளியேஇவர்
களிகூர்ந்திருக்க வேணும்வாழியே

## ஸ்ரீமான் டாக்டர் வரதராஜலு நாயுடு

## சரசக்காரமாமா என்றமெட்டு.

பாட்டு

44. வரதராஜபூமன்தேசவிரதம்நோற்கும்நேமன்
வாரிதிசூழ்புவியோர்புகழ் க்ஷேமன் (வர)

தொகையரு

கருத்தினிலொருபோதும் சுயநலமென்பதே
கருதிடாச்சுகுண சீலன்
உரித்துடனெப்போதும் பொதுநலம்தனக்குமே
உழைத்திடும்புண்ய லோலன்

பாட்டு

வாய்ந்ததிருப்பூர்வாசன்ராஜவைத்தியஸமாஜன்
வண்மைமிகுந்திடும் புண்யப்பிரகாசன் (வ)

தொகையறு

தினந்தோறுங்காந்தியி னுபதேசந்தனையே
சிரமேற்கொண்ட பக்தன்
பணிவோடுசாத்வீகப்போரிலே சைன்யாதிப்
பட்டமும்பெற்ற சித்தன்

பாட்டு

சகலகுணசம்பன்னன் புத்திசாதுரியமிகுமன்னன்
தாசன்காமாக்ஷி கொண்டாடும்விற்பன்னன்

## பிர்மஸ்ரீ சுப்ரமணிய பாரதி

பாரும்பாருங்குன்றேனேயென்ற பியாண்டுமெட்டு.

பாட்டு

45. சுப்ரமண்யபாரதி தய்யகலைவாரிதி
விப்ரகுலசந்ததி மேலானபத்மநிதி

தொகையறு

அகிலநன்மைக்காக உடலபொருளாவியே
அர்ப்பணஞ்செய்த புண்யன்
சகலபேரிடத்திலும் வாஞ்சையேபாராட்டும்
சாத்வீகமுள்ள கண்யன்

பாட்டு

புகழேந்திஔவைகம்பன் போல்கவிபாடுமன்பன்
மகிதலம்புகழும்நண்புன்மன ஊக்கமுள்ளதெம்பன்

தொகையறு

எட்டயபுரந்தனில் சமஸ்தானவித்வானாய்
எழிலுடனமர்ந்த கோமான்
மட்டில்லாச்சேதுபதி வித்யாசாலையில்
வாத்திமைபுரிந்த ஸீமான்

பாட்டு

உத்தமநகர்வாசன் உத்தமர்சாவகாசன்
பக்தன்காமாக்ஷிதாசன் பாடலைக்கேட்குமீசன்

கனம் டாக்டர் ராஜன்
காந்தியடிகள்பாதம் என்ற மெட்டு.

கண்ணிகள்

46. தேசபக்திவிஸ்வாசன் சீர்மேவும்டாக்டர்ராஜன்
நேசமுள்ளசந்தோஷன் நெடியமுகவிலாசன்
செல்வத்திருச்சியூரன் திவ்யஜனோபகாரன்
கல்விநிறைந்ததீரன் காங்ரெஸ்நடத்தும்வீரன்

புத்தியிலாதிசேடன் போன்றகுணவிசேடன்
சித்தர்காந்தியின்சீடன் செந்நெல்விளையும்நாடன்
தினமுங்காமாக்ஷிதாசன் செய்யுள்கேட்குமுல்லாசன்
வனப்புள்ளமந்தஹாசன் வறுமைதீர்க்குச்சுதேசன்

கனம் தேவதாஸ் காந்தி
பரப்பிர்மவேலாபாக்யசீலா என்ற மெட்டு.

பாட்டு

47. தேவதாஸ்காந்தி திடச்சித்தாந்தி
தீவுயெங்கும்புகழும் ஜெயக்கொடிதனையேந்தி
தீரவீரசூர மாரன்(தே)
சிறந்தஜனாபிமானி சீர்த்தியுள்ளபிரதானி(தே)

தொகையறு

ஜென்மபூமிக்குழைக்கவே வந்தவர்
வண்மைமேவுஞ்சிறைபிற் புகுந்தவர்
நன்மையேஒருஉருவாய்ப் பிறந்தவர்
செம்மையானகதர்த்துகி லணிந்தவர்
தீதிலாதசுதேசநேயர்கள்மீதிலேதயைநாளுங்கூர்ந்திடும்(தே)

தொகையறு

காருண்யகாந்திதவத்தேயுதித்தகனிஷ்டபுத்ரசிகாமணியே
பாருக்குள்யாவர்க்குங்காக்ஷி பாலிக்கும்பார்வதிசமேதர்
பாதம்நாளும் பணிந்திடும்பணியே
பதிதனிலனேவரும் மகிழ்காமாக்ஷி
பதமலர்தனையணி உயர்மாமாக்ஷி(தே)

## திவான் பகதூர் மாதவராவ்

### தேவாசம்போசிவா என்ற மெட்டு.

பல்லவி

48. மன்னன் திவான் பஹதூர்
மாதவராவ்போல யேதுவேறுபுண்யோர்

அநுபல்லவி

இன்னிலம்புகழ்ந்திடும் ஈடில்லாவசீகரன்
இரவலர்க்குநன்கொடைஈய்ந்திடுங்கிருபாகரன்
உன்னதக்கல்வியுள்ள உத்தமகுலசேகரன்
உரித்துடன்புவி செழித்திடும்படி
கருத்துடன்தினம் உழைக்குமிங்கித (மன்)

சரணம்

திருவாங்கூர்பரோடாமைசூர் திவான்உத்தியோகமே
சீர்த்தியுடன்செய்துவந்த திடகாத்திரதேகமே
அருமைசேர்காமாக்ஷிதாசன் அறையுமதுராகமே
ஆத்திரத்துடன் பார்க்குள்நித்தமும்
நோக்கம்வைத்துமே கேட்கும்சற்குண (மன்)

## ஆனரபில் மிஸ்டர் ஜார்ஜ் ஜோஸெப்

### இசைந்தஏடும்கரியுரி என்ற திருப்புகழ் மெட்டு.

கண்ணிகள்

49. சுதந்திரதேவிமலரடிபோற்றிடும் சுகுமாரன்
துலங்குஜோஸெப்நிபுணனைப்போலுண்டோ வுபகாரன்
கனிந்துவந்தேமாதரம்கோஷிக்கும் கனிவாயன்
கடந்தஞானிகாந்தியைநேசிக்கும் திகழ்தூயன்
உயர்ந்தபீசுவாங்கிடும்பாரிஸ்ட ருத்யோகன்
உகந்தசிவில்கேசுகள்ஜெயித்திடு மதியூகன்
அரும்பதங்கள்புனைந்திடுங்காமாக்ஷி மகிழ்சீலன்
அரங்கமேடைதனிலுபந்யாசிக்கும் பரிபாலன்

## கனம் மாதவநாயர்

### பகாரியாலா என்ற இந்துஸ்தான் மெட்டு.

### பின்மகுட்டம்

கண்ணிகள்

50. மாதவநாயர் பக்திமார்க்கசகாயர்
மாசிலாஜனுபிமான மேஷியதூயர்
பூமண்டலந்தினங்கொண்டாடும் சம்பிரதாயர்
லோகமாது சேயர்
மாநிலந்தனிலேசுதந்திரம் தானடைந்திடவே
பிறந்த நம் (மா)

புண்யப்பிரகாசன்செல்வம்பொங்கும் சுதேசன்
பூதலந்திகழ்மகாத்மாகாந்தியின் சிஷன்
நற்போதகம்விளங்கிடுங்காமாக்ஷி தாசன்
புகழும்புனித நேசன்
பொதுநலமெனுமரக்கலந்தனே புவியெனுங்
கடல்தனில் நடத்திடும் (மா)

## கனம் சிதம்பரம் பிள்ளை

### டில்லிநகர்தனிலேடிசம்பர்பனிரெண்டிலே என்ற மெட்டு.

51. தேசாபிமானிகளில் சிதம்பரம்பிள்ளையொருவர்
பூஜிதையுடனேதொண்டு புரிந்துவந்தநற்புனிதர்
பொற்புடன்கேட்டிருப்பீர் நண்பர்களே
புந்தியிலறிந்திருப்பீர் அன்பர்களே
ஆசாரமோடுயிந்த அவனிதனிமேலுமன்னரே
தேசவிரதம்பூண்ட தீர்க்கதரிசியிவரே
தெக்ஷிணசீமைதனி லின்றைக்குமே
செப்பிவாயாறு வதுமேயுண்டுமே
ஊரின்பொதுநன்மைக்கி ஒத்துமையுடனுழைத்து
காராக்கிரஹந்தனிலே காத்திருந்தழலவித்து
காமாக்ஷிகீதமலர் சூடுமபுண்யன்
காங்கிரஸபிமான மூன்ளகண்யன்

## மாதுஸ்ரீ கஸ்துரிபாய்.

### ஆவோஜி ஆவ்ஜெண்டில்மேனென்ற மெட்டு.

பல்லவி

52. கஸ்தூரிபாய்தனைப்போல் கன்னிகையுண்டோ

அநுபல்லவி

சத்தியம்ஈகை தயவுள்ளதோகை
தனலக்ஷ்மிதாண்டவம்செய்சௌந்தரரேகை

சரணம்

உயர்தரக்கல்வி உணர்ந்தமுதல்வி
ஊரார்க்குப்பாடுபடும் உத்தமச்செல்வி
கற்புள்ளமாதா கலிதீர்க்குஞ்சீதா
காமாக்ஷிதாசன்புகழ் கருணாதாதா

## ஸ்ரீமதிசரோஜினிதேவி.

### அருட்கடல்ஞானனந்தம் என்ற மெட்டு

53. சரோஜினிதேவியுபந்யாசமே
கேட்கக்கேட்க

சலியாதுநாளும் சந்தோஷமே
தைரியசாலியே சற்குணசீலியே
தாய்நாட்டுக்கனு கூலியே
நல்லதத்துவ ஞானியே
வித்துவ கியானியே
சரிபானசதராடையணி நாயகி
சந்ததம்காமாக்ஷி செந்தமிழ்
தன்னைக்கேட்கும் நற்சாதகி (ச)

## ஸ்ரீமதி சாரளாதேவி.

### நேசமெல்லாம்பாசாங்குதானேஎன்றமெட்டு.

பல்லவி

54. சாஸ்திரமுணர்ந்த மேதாவிசாரளாதேவி

அநுபல்லவி

பாத்திரமறிந்துதர்மம் பாலிக்குமுயர்சஞ்சீவி

சரணம்

தேசநன்மைக்குத்தொண்டு செய்யவிருப்பங்கொண்டு
பூஜிதையுடனுழைக்கும் புத்திநுட்பமுள்ளபெண்டு
சந்ததம்தேசசேவை சாதிக்குமகாத்மாவை
சிந்தனைசெய்துகாரிய சித்திபெற்றுவரும்பூவை
தினமுந்தமிழாராய்ச்சி செய்துவருங்காமாக்ஷி
இனியகவிமாலைசூடும ஏதுமில்லாதகடாக்ஷி

## ஸ்ரீமதி பார்வதிதேவி.

### அமுதமுதேக்கோமுஜே என்ற மெட்டு.

கண்ணிகள்

55. பார்வதிதேவியே பாக்கியசாலி
பாக்கியசாலி யோக்கியசீலி (பா)
பொறுமையிற்பூதேவி போன்றவிசேஷி
போன்றவிசேஷி ஆன்றவர்நேசி (பா)
சிறந்தஞானமுள்ள தேசோபகாரி
தேசோபகாரி மாசில்லாநாரி (பா)
விற்பனன்காமாக்ஷி வேண்டும்விவேகி
வேண்டும்விவேகி நீண்டதியாகி (பா)

## மட்டப்பாறை பிர்மஸ்ரீ வெங்கட்டராமய்யா.

### துள்ளாதேசுறுசுறுப்பானயெண்ணமென்ற மெட்டு.

56.

பல்லவி

விசுவாசன் விதரணைமருவியசுவிசேஷன்
வெங்கட்டராமய்யர்போல இங்கிதம்நிறைந்தோரேது

அநுபல்லவி

சசிதனைநிகர்த்திடும் வதனசிங்காரன்
சதுர்மறைகுலந்தனில் தோன்றியதீரன்
சுசிகரமேவிய புண்யாவதாரன்
சுகமுடன்பிரசங்கம்செய்யுங் கெம்பீரன்

சரணம்

தேசநன்மைக்குக் கங்கணங்கட்டி
திக்குவிஜயமுஞ் செய்வதில்கெட்டி

மோசமானவர்களுக் குடிப்போரைத்திட்டி
முறையுடன்போதிக்கும் பொக்கிஷப்பெட்டி
நாட்டுக்குநாயகமாய் வந்தபத்தன்
நடையுடைபாவனை பொருந்தும்பிரசித்தன்
கோர்ட்டுவிவகாரம் தெரிந்தசமர்த்தன்
கொற்றவர்நன்குமதிக்கும் கிரஹஸ்தன்
மட்டப்பாறைதனில் வாழ்ந்திடும்வாகன்
மாசிலாதகத ரணிந்திடும்தேகன்
அஷ்டலக்ஷ்மி வசித்திடும்யோகன்
அன்பன்காமாக்ஷி கவிக்கருள்தியாகன்

அநுமந்தநகரம்

## ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணசாமிஐயங்கார்.

## 57. பரமானந்தமெய்ப்பரங்குன்றமென்றமெட்டு.

பல்லவி

கிஷ்ணசாமிஐயங்கார் போலேகிருபாநிதி
கிட்டுமோபாரி லினிமேலே

அநுபல்லவி

அஷ்டதிசைபுகழ் நற்குணவாளன்
அமரகுருபோன்ற உயர்கல்வியாளன்
இஷ்டமித்ரர் தினமெச்சும்சீராளன்
எழில்மிகுமந்திர கிரிநிகர்தோளன்

சரணம்

ஆனைமுன்வந்த பரந்தாமன்சரணமலர்
அல்லும்பகலும்போற்றும் நேமன்மதுரகவி
ஸ்ரீநிவாசர்க்கிளையபூமன் கதருடையே
தினமுமணியுந்திகள்சோமன்
பொதுநன்மைக் குத்
தெம்பொடுதொண்டுபுரிந்திடுமன்புள துங்கன்
பரோபகாரச்
சிந்தைமிகுந்துவிளங்குமலங்கிர்தசிங்கன்
வடிவுடைய

வம்பணிகொங்கையர்கண்டுமயங்குமனங்கள்
அனுதினமும்
வண்டமிழ்பொங்கிநிறைந்துயிலங்கும்பிரசங்கள்
தெய்வாம்சமுள்ள
மாமறைகுலந்தனில் தோன்றியவாகன்
மங்குல்தனைப்போன்ற கொடையுள்ளதியாகன்
காமாக்ஷிகவிதனைக் கேட்கும்விவேகன்
கவிஞர்கள்வந்து பேட்டிகாணும்நல்யோகன்

உத்தமபாளையம் கனம்

## முகம்மதுமீராகறுத்தாவுத்தர்.

## 58. செந்திமாநகரந்தனில்மேவியஎன்றமெட்டு.

கண்ணிகள்

கண்யவானமுகம்மது மீரா
கறுத்தாவுத்தர்போல்வேறு தர்ம
கர்த்தாவுமுண்டோகூறு அலை
கடல்சூழ்ந்திடும் புவிமீதினி
லெழியோர்மிசை களிகூர்ந்துமே
கௌதியாஉயர் மதரிசாவென்னும்
கலாசாலைஸ்தாபித்தயோகன் தெய்வ
கற்பதருபோன்ற தியாகன் (க)

ஐந்துநேரமும் சிந்தனையோடந்த
ஆண்டவனைத்தொழும்நேமன் கதர்
பூண்டிடும்சுந்தரபூமன் இந்த
அங்கண்மாநிலமெங்குமே பிர
சங்கமேசெயும் திங்கள்மாமுகன்
அன்பர்யாவரும்பண்புடன்கொண்டாடும்
அருமைமிகுந்தகுணாளன் நல்ல
பொறுமையுடைய தயாளன் (உ)

தேசுலாவிய தொண்டர்படைதனில்
சேர்ந்துழைக்கும்விசுவாசன் நாளும்
மாந்தர்மகிழுமுல்லாசன் மிகு
தேட்டமானகை ராட்டினந்தனை

நாட்டிலேதினமாட்டிடுங் சரன்
தீமையாகிய லாகிரிசேர்ப்போரைச்
சீர்திருத்தம்செய்ததூயன் அன்
பார்ந்தகாமாக்ஷியி னேயன் (க)

கம்பம் கனம் பீர்முகம்மதுராவுத்தர்.

பவணக்கிரியதனிலுறைபகவானேயென்றமெட்டு

59. பாட்டு

பீர்முகம்மதண்ணல்செய்யும்பிரசங்கம்செவிக்கமிர்தம்
ஊர்க்குழைக்கஇவ்வுலகில் உடலெடுத்தபூங்குமுதம்

தொகையரு

பெயர்வாய்ந்த சப்இனிஸ்பெக்டருத்யோகமும்
பெருமையாய்வகித்த தீரன்
உயர்வானதமிழ்தனில் பிரக்யாதியும்பெற்ற
உத்தமமுள்ள மாரன்

பாட்டு

உண்மையுடையகண்யன் உரித்துமிகுந்தபுண்யன்
ஒத்துமையெனும் தத்துவமதை
இத்தரையில் நடத்தியதரன்(பீர்)

தொகையரு

காசினியோர்புகழும் கம்பநகர்தனிலே
களிப்புடன்வசிக்கும் யோகன்
மாசுமறுவில்லாததேசபக்தர்மீதிற் பா
மஞ்சரிவரைந்த யூகன்

பாட்டு

மைந்தன்காமாக்ஷிதாசன்வாக்கியம்கேட்கும்நேசன்
மனதில்நாளும் இறைவன்பாதம்
புனிதமோடு பணியும்நீதம்(பீர்)

தேவாரம் கனம் நாராயணசாமிசெட்டியார்.

60. காந்திமகான்போலுண்டோ என்றமெட்டு.

பல்லவி

நாராயணசாமிபோல் நண்பன்வேறுண்டுமோ

அநுபல்லவி

பேரறிவாளன்பேணுந் தயாளன்
பிறர்க்குழைத்திடும்நீதன் உயர்போதன்
நயகீதன்பிரக்யாதன் தமிழ்
பிரசங்கஞ்செய்யும் தீரன்தினம்
பிரஜையர்க் குபகாரன்
பெரியோர்களின்வர வேற்பவன்
சிறியோர்செயும்பிழை தீர்ப்பவன்
பிரியத்தொடுதிருமுத்தமி ழபிவிர்த்தியும்
புரிந்திட் டவன் (நா)

சரணம்

கர்ணவதாரன்கண்ய குபேரன்
காங்கிரஸபிமானன்பிரதானன்கலைக்யானன்
அனுஷ்டானன் திகழ்
கதரணிந்திடும் தேகன்எழில்
மதனைவென்றிடும் வாகன்
காமாக்ஷியின்கவி கேட்பவன்
கைராட்டினம்தனை நூற்பவன்
கனந்தங்கியஜெயகுஞ்சரகரன் சந்திரர்
தனைநம்பிய (நா)

உடுமலைப்பேட்டை கனம்நாகலிங்கம்பிள்ளை.

61\. சுதேசமுகம்மதலி என்ற மெட்டு.

பாட்டு

தேசியநாக லிங்கம்
திறமுள்ளபுருஷ சிங்கம்
மாசில்லாச்சொக்கத் தங்கம்
மண்ணகர்க்குழைக்குமங்கம் (தே)

தொகையறு

பெயர்போனஉடுமலைப் பேட்டையம்பதிதனில்
பெருமையாய் வசிக்குஞ்சீலன்
உயர்பிரைவேட்வக்கீல் உலகநாதேந்திரன்
ஒயிலுட னளித்தபாலன்

பாட்டு

ஊர்தோறும் போயடுத்து
ஒத்துமைதனைக் குறித்து
சீருட னுபந்யாசித்து
ஜெயமுரசடிக்கும் வித்து (தே)

தொகையறு

மேழிபிடித்துழும் வேளாளகுலத்திற்கு
மேருபோல்விளங்கும் வாகன்
ஆழியணிந்திடும் அழகியகரங்களால்
அறந்தரும்பிரபு டீகன்

பாட்டு

அவனிதனிலே நிதம்
அன்பன்காமாக்ஷி பதம்
ஆமோதிக்குங் குமுதம்
ஆகுலந்தீர்க்கு முசிதம் (தே)

மதுவிலக்கு.

62. மூர்த்தியாய்வந்துதித்தமோதிலால்நேரு என்ற மெட்டு.

பல்லவி

அன்பார்ந்தநேயர்களே அருந்தாதீர்கள்ளு
கள்ளு கள்ளு கள்ளு (அ)

அநுபல்லவி

வம்பாகயெல்லோரையும்வாய்த்துடுக்காய்ப்பேசச்சொல்லும்
தெம்பாய்நினைத்தபடிசிந்தையும்செல்லும்
செல்லும் செல்லும் செல்லும் (அ)

சரணம்

கண்டபடிபொருளைக் காலிபண்ணநினைவையூட்டும்
கொண்டவள்ஞாயம்சொன்னால்கோல்கொண்டுமாட்டும்
மாட்டும் மாட்டும் மாட்டும் (அ)

பூரணமாகவேதான்போதைதனையுமுண்டாக்கும்
ஆரும்பிரமிக்கும்படிஅறிவையும்நீக்கும்
நீக்கும் நீக்கும் நீக்கும் (அ)

பாவம்நிறைந்தசூழும்பஞ்சபாதகத்திலொன்று
கேவலம்தவிரயிதில்கிடையாதுநன்று
நன்று நன்று நன்று (அ)

விற்பனன்காமாக்ஷிசொல்வேதவாக்யம்தன்னைக்கேளும்
இப்பாருலகந்தனில்எல்லோரும்நாளும்
நாளும் நாளும் நாளும் (அ)

## கைராட்டினம்வேண்டுதல்.

33. அடுக்குமல்லிகைதொடுக்குமெத்தையிலே
என்ற மெட்டு.

கண்ணிகள்

வீடுதோறுமேராட்டுநூற்றிடுவீர்
எல்லோரும்ஜாதி
வித்யாசந்தனைஇனிமேல்மாற்றிடுவீர்
தொழில்விர்த்திசெய்திடநல்லயோஜனை
சித்தந்தன்னிலுணர்ந்துபாருமே (வீ)

நமதுமுன்னோர்கள்தொன்றுதொட்டுமேதான்
இக்கைத்தொழிலை
நடத்திவந்தனருள்ளமட்டுமேதான்
இந்துநண்பர்யாவரும்கைவிடாமலே
அன்புகூர்ந்துமேசெய்குவீர்களே (வீ)

காந்திசொல்வதைக்கருத்தில்நாட்டிடுவீர்
காமாக்ஷிதாசன்
காவியந்தனைச்செவியிற்கேட்டிடுவீர்
நல்லகாலம்வந்திடும்பூதலந்தனி
லாலோசித்திடவேண்டாங்கொஞ்சமும் (வீ)

7

## ஜாதிவித்தியாசமொழித்தல்.

### 64. அப்பாடாஇவள்காளியடா என்றமெட்டு.

கண்ணிகள்

ஜாதிவித்யாசமேது
இதைதாழ்மையுடனெண்ணவேகூடாது
ஆதிமனுவன்சூது
இந்தஅந்தரங்கம்சொன்னேனானிப்போது

வலைச்சிவயிற்றில்வியாசர்
வெகுவண்மையுடன்வந்தவதரித்தார்
புலைச்சிவயிற்றில்கபிலர்
முன்புபூவுலகோரறியவேபிறந்தார்

கழுதைவயிற்றில்முன்னர்
மகான்காங்கேயரும்வடிவாய்ஜெனித்தார்
பழுதில்லாதகௌதகர்
காராம்பசுவயிற்றிலுற்பத்தியுமானார்

மறையோரெக்யம்வளர்த்து
ஆட்டைமந்திரமும்சொல்லியேயறுத்து
இறைச்சிதனைப்புசித்து
அவர்இருந்ததுண்டுகேட்டுப்பாரழைத்து

ஆசாரமெல்லாம்போச்சு
கிராப்புஅனைவரும்சிரசில்வைக்கலாச்சு
பாஷையும்வேறுபேச்சு
விப்ரர்பஞ்சமர்க்குஷேக்கன்தரலாச்சு

ஔவைமொழிந்ததைநீர்
நூலில்அருமையுடன்கற்றுணர்ந்திருப்பீர்
வெவ்வேறாயெண்ணிடாதீர்
சும்மாவில்லங்கமும்பேசிவசிடாதீர்

ஒருதாய்மக்களைப்போலே
நாமள்ஒத்திருக்கவேணுமினிமேலே
இறையோனருளினாலே
நல்லஇஷ்டசித்தியுண்டுமேபின்னாலே

பூமரம்தோறும்நாளும்
வண்டுபொற்புடன் மதுவையுண்டுசூழும்
காமர்பாளையம்வாழும்
பக்தன்காமாக்ஷியின் கீதாமிர்தங்கேளும்

## கதர்நெய்தல்.

65. ஜாதிஒன்றுதானென்ற மெட்டு.

பல்லவி

கதரைநெய்குவீர்இடையில்கட்டச்செய்குவீர்

அநுபல்லவி

கதிவாய்ந்தவள்ளுவருமகையாண்டுவந்தவேலை
இதுகாறும்பார்த்ததில்லைஇவ்வளவுநல்லநூலை

சரணம்

கிழியாமலெப்போதும் கெட்டியாயுடையும்தாங்கும்
பழிப்பாயிதன்வேலைக்குப்பகாமுடியாது தீங்கும்
கருணைச்சித்தமுடையகாந்திசொன்ன மூலமந்திரம்
அருமையுடனேநாமள் அடையலாமினிச்சுதந்திரம்
தெள்ளுதமிழ்காமாக்ஷி செப்பியதிருப்பதமே
உள்ளமகிழ்வுடனே ஒருங்குசேர்ந்தெல்லோரும்நிதமே

## கல்வி அபிவிர்த்தி.

66. ஆண்டிப்பண்டார மென்ற மெட்டு.

பல்லவி

தமிழைவாசிப்பீர்அதை சதாபூஜிப்பீர்தெள்ளு

அநுபல்லவி

தற்காலம்விர்த்திசெய்ய சரியானகாலட்க்ஷேபம்
முக்காலமசிந்தித்தோர்க்கு முற்றிலுமேக்ஷேமலாபம்

சரணம்

புகழேந்திஒட்டக்கூத்தன் புலவர்கள்கணக்கில்லாப்பேர்
சுகமோடுசற்றுணர்ந்து தொல்லுலகில்கீர்த்திபெற்றார்

முன்னேஇருந்தமன்னர் முடிசாய்ந்துபோனதினல்
பின்னேஇதனுடைய பிரகாசமும்போச்சேமண்மேல்

காராளகுலதிலகன் காமாக்ஷிதாசன்பாட்டு
தாராளமாகவேதான் சந்ததமனதில்கேட்டு

## ஒற்றுமைச்சீர்திருத்தம்.

67. மாசிமாசிமாக்கோரேயென்ற மெட்டு.

துக்கடா

உத்தமசிரேஷ்டரே
ஒத்துழைப்பீர்சித்தம்நீரே
ஊக்கம்விடாதீர்
உங்களுக்குள்உயர்வெண்ணு தீர்

உண்மை உண்மை இதுபோலிருந்தால்
நன்மை நன்மையே சாற்றினேன்

உரித்துடன்கேளுங்கள்
கருத்துடன்வாழுங்கள்

சதா சதா உரித்துடன்கேளுங்கள்
உத்தமன்காமாக்ஷி செந்தமிழ்க்கீதம்
ஊரார்க்கெல்லாமோர்போதம் (உ)

## மகாத்மா காந்தியின் போதனைமுறை.

நானிருந்தவீடிதல்ல யென்ற மெட்டு.

68. நோட்

மூதறிவுடையஇந்துமுஸ்லிம்நேசரே
முனிவர்காந்திகூறும்வேதமொழியைக்கேட்பீரே
போதையின்வாதையைபபோககடிப்பீரே
பொறபுடன்கதருடையைப்புனைந்திடுவீரே
புவிமீதிதுவேவோர்வயிராக்கியமே
ஜாதிமதவித்யாசம்தன்னைமாற்றுவீர்
சந்ததம்லோகமாதாவைப்போற்றுவீர்

சற்குணன்காமாக்ஷிகூறும்தமிழைச்சாற்றுவீர்
ஜகமீதினிமேலொருதாய்சுதர்போல்
நீதமோடுஒத்துழைக்கநிலையைநாட்டுவீர்
நித்தமுங்கைத்தொழில்செய்துகாட்டுவீர்
நேர்மையுடனேசுதேசநெறியையூட்டுவீர்

## வந்தேமாதா வந்தனை வழிபாடு.

### வண்ணத்தினைமாவைத்தெள்ளியேஎன்றமெட்டு.

கண்ணிகள்

69. வந்தேமாதரமுங் கோஷிப்போம்
எல்லாம்வல்லகடவுளைப்பூஜிப்போம்
மகான்வள்ளல் காந்திபுகழ்பாஷிப்போம்
நிலவளமேவியபுவிமீதினிலனைவோர்களு
மொயிலாகவேவண்டமிழ்தன்னையேவாசிப்போம்
இந்துமக்களெல்லோரையும்நேசிப்போம் (வந்)

பாரதமாதாவைப்போற்றுவோம்
ஜன்மபாஷையேஎப்போதும்சாற்றுவோம்
நாளுமபாரில்மதபேதமாற்றுவோம்
இந்தப்பதிமீதினிலெவராகிலுமிழிவாகவே
நவின்றாலுமேபழிப்பாய்நினையாமலாற்றுவோம்
சதாபஞ்சபூதங்களைத்தேற்றுவோம் (வந்)

காமாக்ஷிகீர்த்தனம்பாடுவோம்
அவர்கவிதைமலர்தனைச்சூடுவோம்
மனக்களிப்பாயானந்தக்கூத்தாடுவோம்
காலங்கடராமலேஇனியாகிலும்
கடல்சூழ்ந்திடும்ஜெயபூமியில்
கைத்தொழிலைச்செய்யநாடுவோம்
அதற்கானவழிதனைத்தேடுவோம் (வந்)

## திரிசொல்உபாக்யானம்.

## 70. ஆனந்தக்களிப்பு.

கண்ணிகள்

கூறுகிறேனொருபாயம்
சற்றுகுணமுடன்கேட்டிடிலுண்டுசகாயம்
பாரிலஞ்சுபேர்பஞ்சாயம்
வைத்துப்பைசல்செய்துவந்தால் கிடைக்கும்நியாயம்

கள்ளுக்குமாத்தைவிடாதீர்
வம்பாய்கர்மத்தைநீங்களும்தேடிக்கொள்ளாதீர்
உள்ளபலனைப்போக்காதீர்
காந்திஉரைக்கும்நல்வாக்குதனைமறவாதீர்

தேசியக்கல்வியைநாட்டும்
வெகுதெளிவுடன்ஞானத்தைமென்மேலுமூட்டும்
தாசன்காமாக்ஷிசொல்பாட்டும்
நாளும்தன்மையாய்க்கேட்போர்க்குஇன்பத்தையூட்டும் (கூ)

## அல்லாஹு அக்பர்ஜெயகீதம்.

## 71. மேடைமீதிலேறிமதன்வேதம்பாடலாம் என்றமெட்டு.

துக்கடா

ஆதிஇறையோனல்லாஹு அக்பர்க்குஜெய
அருமையுள்ள எம். கே. காந்திஅன்பர்க்குஜெய
அறிவுடையமுகம்மதலிஅனைவர்க்கும்ஜெய
அவனிபுகழ்ஷவுக்கதலிஅண்ணலுக்கும்ஜெய

இன்பம்அளிக்கும்சுயாட்சி
கோரும்அறிஞன்காமாக்ஷி
தமிழ்அனைத்துமாராய்ச்சி
செய்யும்ஆன்றோர்க்கேசாக்ஷி (ஆதி)

## ஸ்ரீமான் வரதாராஜலுநாயுடு வரவேற்பு
## பத்தொன்பதாம்நூற்றுக்குமே லென்ற மெட்டு

72 கண்ணிகள்

ஆர்ந்தருத்ரோத்காரியாண்டு ஆடியஞ்சாங்தேதியன்று
தேர்ந்தவொருவரதராஜசீமானைமகாஜனங்கள்
திருநகர்பாளையத்தில்வரவழைத்த
சிறப்புதனைக்கூறுகிறேனனுமெத்த

தேசியக்கொடிபறக்கதிகழானைமுன்னடக்க
மூசுயத்தொண்டர்படைகள்முன்னும்பின்னும்வாழிகூற
மோட்டார்கார்வண்டிரெண்டுமோதிவர
முழங்கினதேமேளதாளம்இன்பமுற

வருமுதற்காரிலந்தமகிபனும்சகோதரியும்
அருமையுள்ளமைத்துனரும்ஆரோகணம்செய்துசீராய்
அழகுடன்நகர்வலமுமசுற்றிவந்தார்
அண்டர்களும்புஷ்பமாரியைப்பொழிந்தார்

மறுதினம்சனிக்கிழமைமாலைரெண்டுமணிசுமார்க்கு
பெருமைசேர்நைனுக்காவள்ளல்பேட்டைதனிலமைத்திருக்
[கும்

பேர்பெற்றகொட்டகையில்விசித்திரமாய்
பிரசங்கமுமநடைபெற்றதுமுதல்தரமாய்

சிறந்தஇக்காரியத்திற்குத்தெம்புடன்முயற்சிசெய்த
நரேந்திரனுங்கறுத்தராவுத்தர்தனக்குநாளும்
நன்றிவிசுவாசந்தன்னைத்தேடலானேன்
நற்றமிழ்காமாக்ஷிபதம்பாடலானேன்

## தேசபக்தர்கள் மங்களவாழ்த்து.

### 73. சரிசரிசாமுத்ரிகாலக்ஷணியென்ற மெட்டு.

பல்லவி

ஜெயஜெயதேசபக்தரெல்லோர்க்கும் (ஜெ)

அநுபல்லவி

நயமேவியசுயராச்சியவிதைதூவிய
நௌரோஜிக்கும் (ஜெ)

சரணம்

காசினிபுகழும்பாலகங்காதரதிலகர்க்கும்
கருணையுள்ளமோஹனதாஸ்கரன்சந்திரகாந்திக்கும்
கற்றவர்கட்கும்உயர்நற்றவர்கட்கும்
கனந்தங்கியதிகழ்சுந்திரபெபின்சந்திரபால்தனக்கும் (ஜெ)

நல்விவேகானந்தரோடுநமதுஇந்துநாட்டுக்கும்
ராச்சியம்புகழ்ந்திடுங்காமாக்ஷிசொல்லும்பாட்டுக்கும்
ஜெயதிராய்க்கும்நல்லஉசிதமேவாய்க்கும்
ஜெயபத்திராதிபாசுப்பிரமணியத்துரையவர்களுக்கும் (ஜெ)

—•—

சுபம்.

இந்துதேசாபிமானிகள்

# இனியரமணியகீதம்

முற்றிற்று.

நமது நண்பர்களனைவரும் எதிர் பார்த்திருந்த

## புதிதாக வெளிவந்திருக்கும்

## பக்திரஸ கீதங்கள்.

ஸ்ரீமான் மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமாரர், மகா-ா-ா-ஸ்ரீ **M R. S.** வேல்சாமி கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வரஞ்சித மெனும் பக்தி ரசக்கீர்த்தனம் முதற்பாகம் விலை ரூ ... 0—5—0

ஷை இரண்டாம்பாகம் ... ... 0—5—0

ரெட்டிநகர் வித்வான் இராமசாமிக்கவிராயர் அவர்களியற்றிய பக்திரசகீதாமிர்தம் ... 0—4—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரசன்சண்முகனுர் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரசக் கீர்த்தனம் ... ... .... 0—4—0

மதுரை, சபாரஞ்சித R. V. சக்திவேலாச்சாரியார் அவர்கள் இயற்றிய குமர பஜனமிர்தம் புதிதாக வெளிவந்தது ... 0—6—

ஷையாரியற்றிய வேணுகானம் என்ற நூதன பக்திரச கீர்த்தனம் அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளிவரும் ... 0—6—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P. காமாக்ஷிபிள்ளை இயற்றிய விநோத பரமானந்த கீர்த்தனம் ... ... ... 0—5—

ஷையாரியற்றிய இந்துதேசாபிமானிகள் இனிய ரமணியகீதம் புதிதாகப்பாடியது ... 0—5—0

**மு. கிருஷ்ணபிள்ளை.**

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு,

புத்தகஷாப், மதுரை